# மன்னா

## CSI தமிழ் திருச்சபை அலைன்



நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுகொள்ளுவது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும்,நான் உங்களை ஏற்படுத்தினேன்.
யோவான் 15:16

பொழிவு 13 மே 2020 ஆகாரம் 05

# MAY 2020

| | | |
|---|---|---|
| 1st May<br>11:00 AM - 1:00PM | மாதாந்திர உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 1st May<br>7:00 PM – 9:00 PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 8th May<br>7:00 PM – 9:00 PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 8th May<br>8:30PM – 10:00PM | வேதாகம போட்டி | ஒத்திவைப்பு |
| 15th May<br>6:30 PM – 8:00 PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 16th May<br>7:30 PM – 9:00 PM | பெண்கள் ஐக்கிய சங்கம்<br>மாதாந்திர ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 22nd May<br>7:00PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 29th May<br>7:00 PM – 9:00 PM | துதி பாடல் ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 30th Apr<br>11:30PM – 12:30AM | மாத இறுதி மற்றும் புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அறிவுறுத்தலின்படி;
சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை–அலையின்; நடத்த திட்டமிட்டிருந்த அனைத்து சபை ஆராதனைகள் மற்றும் இதர கூட்டங்கள் அனைத்தும் 17/03/2020 முதல் மறு அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆன்லையின் மூலமாக நீங்கள் ஆராதனையில் பங்குப்பெற அன்புடன் அழைக்கிறோம்.

## சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் – ஆலைய வளாகம், அலைன
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service /திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Fellowship / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Women's Fellowship / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Friday's / வெள்ளிகிழமை | 6:15 PM | CBS/சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |



# பாரத்தோடு ஜெபிக்காவிட்டால்...
# ஜெபித்தபிறகும், பாரம் இருக்கும்!




## உள்ளே வாசிக்க..


- ஆயர் மடல்
- திருமறை தியானப்பகுதி
- செயலரிடமிருந்து
- வேதாகம களஞ்சியம்
- மிஷனரி சுயசரிதை
- கட்டுரைகள்
- Facts
- பாடல் பிறந்த கதை
- Children's Corner
- வேத வினாவிடை போட்டி
- பிறந்த/திருமண நாள்
- தெரிந்து கொள்வோம்
- திறப்பிலே ஜெபக்க.
- வேத வாசிப்பு





**CSI TAMIL PARISH**
**Al Ain, UAE**

# ஆயர் மடல்...



## அன்புக்குரியவர்களே,

உழைத்து உழைத்து ஒரு மெழுகு திரியைப்போல தன்னையே இழக்கிறவர்களைத்தான் உழைப்பாளிகள் என்று அழைக்கிறோம். இந்த சமுதாயத்தில் பொதுவாக எல்லோருமே ஏதோ ஒரு வகையில் உழைத்துக்கொண்டிருக்கிறோம். ஒரு சிலருக்கு Mental Labour (நம்முடைய மூளைக்கு அதிகமான வேலையை கொடுக்கிற நன்றாக படித்த திறமை சாலிகளின் வேலைகள்). ஒரு சிலருக்கு Physical Labour (பெரும்பாலும் குறைவாகப் படிக்கிறவர்களின் சரீர உழைப்பு). இந்த சமூகத்தில் Mental Labourக்கு கிடைக்கிற மதிப்பும், மரியாதையும், சம்பளமும், வசதி வாய்ப்புக்களும், உயர்வுகளும், Physical Labourக்கு கிடைப்பதில்லை.

இந்த corona virus pandemic attack காட்டுத்தீயைப்போல பரவிக்கொண்டிருக்கிற இந்த சூழலில் தூய்மை தொழிலாளர்களை பல இடங்களில் பெருமைப்படுத்தி, கனப்படுத்தி, போற்றிக்கொண்டிருக்கிற பெரிய மாற்றங்களை இந்த நாட்களிலே பார்க்கிறோம். அவர்களுடைய உழைப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் இந்த நாட்களில் உணர்ந்திருக்கிறோம். COVID–19 இதோடு கூட பல பாடங்களை நமக்கு கற்றுக்கொடுத்துக் கொண்டுருக்கிறது. மருத்துவ துறையினரின் தியாகத்தையும், உழைப்பையும் நாம் சிறிது நினைத்துப்பார்க்க, நன்றி கூற கற்றுக்கொண்டிருக்கிறோம். மேலும் சேரியில் வசிக்கிற ஏழைகள், இடம் பெயர்ந்த கட்டிட தொழிளார்கள் (Migrants), அனுதின கூலித்தொழிளார்களின் ஆரோக்கியமும், வாழ்வாதாரங்களும் மிகவும் முக்கியமான ஒன்றாக எண்ணிப்பார்த்து, அவர்கள் பாதிக்கப்பட்டால் ஒட்டுமொத்த சமுதாயமும் பாதிக்கப்படும் என்பதை கற்றுக்கொண்டிருக்கிறோம்.

இந்த மே தினத்தில் இப்படிப்பட்ட உழைக்கும் உழைப்பாளிகளுக்காக ஜெபிக்க கற்றுக்கொள்வோம். Digital worship serviceஐ, இந்த மாதாந்திர மன்னாவை உங்கள் மத்தியிலே கொண்டு வர தனது தன்னலமற்ற உழைப்பை காணிக்கையாக செலுத்திவரும் செயலருக்கு எனது நன்றிகள்!

அன்புக்குரியவர்களே கடந்த 3ஆண்டுகளாக உங்கள் மத்தியில் ஊழியம் செய்ய கர்த்தர் எனக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்த்து நான் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்! உங்களுடைய அன்பையும் எண்ணிப்பார்த்து! திருச்சபை மக்களாகிய உங்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். என்னுடைய இருதயத்தில் உங்கள் நினைவுகளோடு கடந்து செல்ல ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

God Bless you !
கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



இப்படிக்கு உங்கள் ஆயர்,
**Rev. M. Christopher Rajendran... ....**

# திருமறை தியானப்பகுதி




அன்புக்குரியவர்களே..!

ஆண்டவராகிய இயேசு தன்னுடைய farewell discourse’ல் தான் அப்போஸ்தலர்களை விட்டு விண்ணுலகம் செல்லப்போவதை உணர்ந்து, இந்தப் பகுதியில் அவர்களை தன்னோடு கொண்டி ‘ருக்கிற நட்புறவில், ஐக்கியத்தில் நினலத்திருக்க வேண்டுமென்று ஒரு புதிய சத்தியத்தை அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமல்ல, இன்றைய திருச்சபை மணவாட்டியாகிய நமக்கும் கற்றுக் கொடுக்கிறார். தன்னுடைய உறவில் தான் அவர்களுடைய எல்லா ஆசீர்வாதங்களும் அடங்கி யிருக்கிறது என்பதை அவர்கள் தெளிவாக புரிந்து கொள்ளும்வண்ணம் அன்றைய விவசாய சூழலில் இயேசு மிகத்தெளிவாக சொல்லியிருக்கிறார். John 15:5b’ல் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. Apart from Me you can do nothing. ஆதலால் அப்போஸ்தலர்கள் இனி தனித்து வாழப்போகிற வாழ்க்கையில், செய்யப்போகிற ஊழியங்களில் இயேசுவோடு இணைந்தே, இசைந்தே, அவரது சித்தப்படியே ஊழியம் செய்ய வேண்டும்.

பொதுவாக பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களைத்தான் கர்த்தர் திராட்சை செடிக்கு ஒப்பிட்டு பேசியிருக்கிறார். உதாரணமாக **Psalms 80:8-16, Isaiah 5:1-7, Jeremiah 2:21, Ezekiel 15 : 1-8, 17: 5- 10, Hosea:10:10. A branch cut from a Vine is worthless except to be burned as fuel mentioned in Ezekiel 15: 1-8 is more fit with the statements about the Disciples as branches and Jesus described Himself as Vine.** அதுவும் இஸ்ரேல் மக்களைப்போல கசப்பான பழங்களை தரக்கூடிய கசப்பான திராட்சைச் செடியல்ல,

Jesus Used an analogy of a Vine and its branches to inform them of how to remain in connection with Him and encourage them to not fall away from His closure fellowship. The Apostles must learn that His relationship is the only source of their Eternal life and the source of their Missionary life.

பொய்யான திராட்சைச்செடியல்ல, நானே மெய்யான திராட்சைச்செடி (John 15:1) என் பிதா திராட்சைத் தோட்டக்காரர் என்று புதியமுறையில், புதிய ஏற்ப்பாட்டில் தன்னையும் பிதாவையும் இணைத்தே எல்லாக்காரியத்திலும் சீஷர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார். தான் எவ்விதமாக பிதாவின் சித்தத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேனோ அதுபோல சீஷர்களும் நல்ல, உயர்தரமான கனிகளை கொடுக்க வேண்டுமென கற்றுக்கொடுக்கிறார். இஸ்ரேல் மக்களைப்போல ஆகாத கொடிகளாக, எறியுண்ட கொடியைப்போல அழிவுக்கு பாத்திரவான்களாகிவிடக்கூடாது என்று எச்சரிக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் ஒரு சிலாக்கியமென்னவென்றால் திருச்சபை மக்களாகிய நாம் திராட்சைச் செடியல்ல! இயேசுவே மெய்யான திராட்சைச்செடி! நமக்கு இங்கே பொறுப்பு பெரும்பாலும் குறைந்து, இயேசுவுக்குத்தான் திராட்சை தோட்டக்காரராகிய பிதாவுக்கு நல்ல, மிகுதியான பலன்களாகக் கனிகளைக் கொடுக்க வேண்டிய பொறுப்புள்ளது. திராட்சை செடிக்கு மாத்திரமல்ல அதனோடு பிண்ணிப்பிணைந்து, நிலைத்திருக்கிற கொடிகளாகிய நமக்கும் 50% பொறுப்பு உள்ளது என்பதை நாம் சற்று ஆழ்ந்து புரிந்து கொள்ளவேண்டும். இயேசுவுடைய உதவி எப்பொழுதும் கொடிகளாகிய நமக்குண்டு என்பதை நாம் ஆழ்ந்து புரிந்து கொண்டால் கொரானா பாதிப்பை நாம் பெரிதாக எண்ணிக்கவலைப்படமாட்டோம். இயேசுவோடே இணைந்த கொடிகள் பயப்படத் தேவையில்லை! யோசித்துப்பாருங்கள்!


Do your self-examination and introspection about your branch- vine relationship in these quarantine period. If you are not connected with the True Vine surely you will be in danger ! So, Lord Jesus replaces Israel and chosen us as His branches and His members of His body. In order to save us He allowed His body to be crucified, hereafter He will not allow His members of His body (we are His branches) to be cut off . So, with this confidence let us obey Jesus and love Jesus sincerely and rely upon Him as true branches.

**God Bless you and be fruitful to glorify heavenly Father! Give more fruits not only as fruits of the Spirit but also be as Blessings for many people wherever you are placed.**

**இப்படிக்கு**

**உங்கள் அன்பு ஆயர்,**

**Rev. M. Christopher Rajendran**






# செயலரிடமிருந்து...




பிரியமானவர்களே...

பிதாவாகிய தேவனாலும்,
நம்முடைய இரட்சகராயிருக்கிற
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்,
உங்கள் யாவருக்கும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.


2020 ஆம் ஆண்டில் நான்கு மாதங்களை நிறைவு செய்து ஐந்தாவது மாதத்திற்குள் கடந்து வந்திருக்கிறோம்; உலகமெங்கும் பரவி வரும் கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தினால் போடப்பட்டுள்ள ஊரடங்கு நிமித்தம் கடந்த இரண்டு மாதங்களாக நம்முடைய இல்லங்களிலேயே அடங்கி இருக்கும் வித்தியாசமான ஒரு கடினமான பாதையில் நம் வாழ்வு தொடர்கிறது. இதன் உச்சக்கட்ட நிகழ்வினால் நம்முடைய அனைத்து திருச்சபை நிகழ்வுகளும் இதுவரை ரத்து செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதத்தின் அனைத்து திருச்சபையின் ஆராதனைகள் ஆன்லைன் மூலமாக திருச்சபையாருக்கு ஒழுங்கு செய்யப்பட்டு ஒளிபரப்பபட்டது. இந்த கட்டுப்பாடான நேரத்திலும் என்னோடு கூட தங்களை அர்ப்பணித்து இந்த ஆன்லைன் ஒளிபரப்பை நடத்த உதவி செய்து கொண்டிருக்கும் நம் திருச்சபையின் போதகர், ஆயரம்மா, துனை தலைவர்-திரு. கண்ணன், பொருளாளர் திரு. மெல்பின் பால், திரு. பால் ஞான பிரபு– வார்டன், திரு.சந்தோஷ் குமார் அவர்களுக்கும் கர்த்தரின் நாமத்தினாலே நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இந்நாட்டில் அவ்வப்போது அறிவிக்கபடும் பொதுவான ஒழுங்கு முறைகளை பொறுப்போடு கடைபிடிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நம் திருச்சபையின் அங்கத்தினர் அனைவரும் ஒருவரோடொருவர் வீட்டில் இருந்தவாறே தொடர்பில் இருந்து ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி ஜெபத்திலே தாங்குங்கள். மீண்டும் திருச்சபையின் ஆராதனைகளும் மற்ற காரியங்களும் இயல்பான நிலைமைக்கு திரும்ப ஊக்கமாய் ஜெபியுங்கள். நாம் கருத்தாக நமது சங்கிலி தொடர் மற்றும் பிற இடங்களிலும் ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். ஒருவேளை கடைசி காலங்களில் கடினமான சவால்கள் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தாலும் பேதுரு சொல்வதுபோல் நாம் வாழ்ந்து காலங்களை பிரயோஜன படுத்திக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

உலகில் ஏதேனும் ஒரு வகையில் உழைத்துக் கொண்டிருக்கும் அத்தனை
உழைப்பாளிகளுக்கும் அடியவனின் சிரம் தாழ்ந்த வணக்கங்களும்...
பணிவான மே தின வாழ்த்துக்களும் உரித்ததாக்குகிரேன் .

**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்;**
**உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்;**
**ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்**




BIBLE BOOKS IN PALM
OLD TESTAMENT
NEW TESTAMENT
HISTORY
JOS JUD RUT 1 SAM 2 SAM 1 KIN 2 KIN 1 CHR 2 CHR EZR NEH EST
POETICAL
JOB PSA PRO ECC SOS
MAJOR PROPHETS
ISA JER LAM EZE DAN
MINOR PROPHETS
HOS JOE AMO OBA JON MIC NAH HAB ZEP HAG ZEC MAL
PENTATEUCH
GEN EXO LEV NUM DEU
GOSPELS
MAT MAR LUK JOH
HISTORY
ACTS
EPISTLES
ROM 1,2 COR GAL EPH PHI COL 1,2 THES 1,2 TIM TIT PHI HEB JAM 1,2 PET 1,2,3 JOH JUD
PROPHECY
REV
Let every book of the Bible be in your finger tips.
OT/NT BOOKS
Prepared by: Elango Durai


BIBLE BOOKS IN PALM
பழைய ஏற்பாடு
புதிய ஏற்பாடு
சரித்திரம்
சங்கீதங்கள்
பெரிய தீர்க்கதரிசனம்
சிறிய தீர்க்கதரிசனம்
ஐந்தாகமம்
யோசு
நியா
ரூத்
1 சாமு
1 சாமு
1 இரா
2 இரா
1 நாளா
2 நாளா
எஸ்றா
நெகே
எஸ்தர்
யோபு
சங்கி
நீதி
பிரச
உன்ன
ஏசா
எரே
புலம்
எசே
தானி
ஓசியா
யோவே
ஆமோ
ஒபதி
யோனா
மீகா
நாகூ
ஆபகூ
செப்
ஆகா
சகரி
மல்கி
ஆதியா
யாத்ரா
லேவி
எண்
உபா
சரித்திரம்
நிருபங்கள்
தீர்க்கதரிசனம்
சுவிசேஷங்கள்
அப்போ.
நடபடிகள்
ரோமர்
1,2 கொரி
கலா
எபே
பிலி
கொலே
1,2 தெச
1,2 தீமோ
தீத்து
பிலமோ
எபிரே
யாக்
1,2 பேது
1,2,3 யோவா
யூதா
வெளி
விசே.
மத்தேயு
மாற்கு
லூக்கா
யோவா
வேதப்புத்தக
அட்டவணைகள்
உங்கள் விரல்
நுனியில்
இருக்கட்டும்
பழைய
புதிய
ஏற்பாடு
புத்தகங்கள்
Prepared by: Elango Durai

# நீதிக்கு உதவிய பிலாத்து மனைவி

கடும் நித்திரை மக்களுக்கு வரும் போது அவர்கள் படுக்கைக்கு செல்லும்போது. அவர்கள் சொப்பனத்திலே மனு‘னுடைய செவிக்கு தாம் செய்யவேண்டிய காரியத்தை வெளிப்படுத்தி. அதை அவர்களுக்கு வரும் ஆபத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளவும் சில நேரங்களில் அவாகள் தப்பித்து கொள்வதுடன் அவர்கள் பெருமையடையவும் செய்கிறது என்பதனை (யோபு 33:15- 18) வரை நாம் காண முடிகிறது.

நியபிரமாணம் அறியப்படும் முன் மனிதர்கள் கண்டிருந்த உண்மை. தேவ பிரமாணங்களை அறியாத ஒரு புறஜாதிப் பெண் தேசாதிபதியான பிலாத்துவின் மனைவிக்கு வந்த சொப்பனங்கள் பிலாத்துவை எச்சரிப்பதற்க்காக ஆளை அனுப்பி வைக்கிறது (மத். 27: 19). அந்தவர்த்தைகள் பிலாத்துவையும் இயேசுவை நீதிமான் என்றே கூறவைக்கிறது.

கணவன் தவறு செய்து தன் குடும்பத்திற்க்கும் தன் சந்ததிக்கும் அழிவைக் கொண்டு வந்து விடக்கூடாது என்று கலங்கும் இந்த மனைவி. நியாய சாசனத்தில் அமர்ந்திருக்கும் கணவனாகிய பிலாத்துவிற்க்கு எச்சரிக்கை விடுகிறாள். தெவனுக்கு தேவ நியாயப்பிரமாணத்திற்க்கும் பயப்படுகிற அந்தப் பெண். நீயாய பிரமாணனான தன் கணவனை நேகித்தபடியால் எச்சரிப்பை துணிந்து தரமுடிகிறது. இன்றும் பாதாளத்தில் பிலாத்து தன் கைகளைக் கழுவிக் கொண்டே **“இந்த நீதிமானின் இரத்தபளிக்கு நான் பங்காளியல்ல”** என்று சொலிக் கொண்டிருப்பதாக சிலர் கூறுவர். அத்தகைய பெரிய தாக்கத்தை செய்துவிட்டாள் நியாயப்பிரமாணம் அறியாத பிலாத்துவின் மனைவி.

ஒருவேளை பிலாத்துவின் மனைவியின் சொப்பனங்கள் “இயேசுவை பாவமற்றவர்” என்பதனை நிரூபிக்க மற்றோரு உபகரணமாக இருந்தாலும். அதிகாரப் பெருமை தன் கணவனை அருகேயிருந்கு கூக்குரலும் பெரிய ஜனக்கூடத்தைக் கண்டு தான் நீதியில் தடுமாற கூடாது என்பதற்க்காக அவள் எக்கரிக்கை தொனியை கொடுக்கிறதை வேதத்தில் காணமுடிகிறது.

அன்பனவாகளே! இன்றும் பல அரசு பணியில், நீதி துறையில் உள்ளவர்களின் பக்தியுள்ள மனைவிகள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களை பலவேளைகளில் செய்யமுடியும். ஆனால் பலவேளைகளில் நல்ல தீர்ப்பு கொடுக்க காத்திருக்தும் கணவன்மார்களை பெரும் பணத்திற்காக சில ஆடம்பரத்திற்பதக நாசப்படுத்தி தங்களையும் குடும்பத்தினையும் படுபாதாளத்திற்கு கொண்டு போகிற நபர்களும் நம்முடைய கிறிஸ்தவ சமுதாயங்களில் கூட காணப்படுது மிகுந்த வேதனைக்குரியது. இதற்க்கு நியயப்பிரமாயம் படிக்காமல் நியாயபராணியான பிலாத்துவின் மனைவி உயர்ந்து நிற்க்கிறாள்.

**- நெல்சன் சோபித ராஜ்.**

# அவரில் நிலைத்திருப்போம்...




**“என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்க மாட்டீர்கள்.” (யோவான் 15:4)**

நாம் தேவனில் நிலைத்திருத்தல் என்பது நாம் தேவனோடு இணைந்து, நாம் அவரிலும் அவா் நம்மிலும் ஒன்றித்து வாழும் வாழ்க்கை ஆகும். அல்லாது ஒத்து போவது, பின்பற்றுவது அல்லது கட்டளையை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற வாழ்வு அல்ல. மத் 10:22ல் “முடிவு பரியந்தம் நிலைத்திருக்கிறவனே இரட்ச்சிக்கப் படுவான்” என்று கிறிஸ்துவானவா் தம் சீடர்கட்கு உபதேசிப்பதைப் பாா்க்கிறோம். நாம் எப்படியாக காணப் படுகிறோம் யாா் அவரில் நிலைத்திருக்கிறவன் என்பதனை சில வேத வசனங்கள் மூலம் பாா்ப்போம்.

**அவர் நடந்த படியே தானும் நடக்கிறவன்**: யோவான் 15:5ல் கிறிஸ்து சொலலுகிறாா் “நான் உங்களுக்கு செய்தது போல நீங்களும் செய்யும் படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்” என்று. மேலும் 1யோவான் 2:6 சொல்லுகிறது “அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லு கிறவன் அவா் நடந்த படியே தானும் நடக்க வேண்டும்.”என்று. இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில்இ நாம்முடைய இந்த உலக வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதை கற்றுத் தரும்படியான வாழ்கையை வாழ்ந்து காட்டினாா்.

**அவருடைய சித்தத்தின் படி செய்கிறவன்:** எபேசியா் 6:6ல் பவுல் சொல்லுகிறாா், “மனுஷனுக்கு பிரியமாயிருக்க விரும்பு கிறவா்களாக பாா்வைக்கு ஊழியம் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூா்வமாய் தேவனுடைய சித்தத்தின் படி செய்யுங்கள்” என்று. நாம் எதை செய்தாலும் அதை தேவனுடைய நாம மகிமைக் கென்று அவா் சித்தத்தின் படி செய்யும் போது நாம் அவரில்

நிலைத்திருக்க முடியும். மேலும் 1 யோவான் 2:17 சொல்லுகிறது "தேவனுடைய சித்தத்தின் படி நெய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" என்று.

**பாவம் செய்யாதிருக்கிறவன்**: 1 யோவான் 3:6ல் "அவரில் நிலைத்திருக்கிறவன் எவனும் பாவஞ்செய்கிறதில்லை. பாவம் செய்கிற எவனும் அவரை அவரைக் காணவுமில்லை, அவரை அறியவு மில்லை." என வாசிக்கின்றோம். நம்மை தாயின் கருவில் தெரிந்து கொண்ட தேவன், நம்மை பெயர் சொல்லி அழைத்த தேவன் இந்த உலகத்தின் அழிவுகளுக்கு நம்மை விலக்கி இவ்வளவாய் ஆசீர்வதித்து காத்து வருகிறார் என்பதை அறிந்த நாம் அதை மறந்து உலகத்தோடு நம்மை ஒப்புரவாக்கி கொள்ளாமல் அவரிலே நிலைத்திருப்பது அதிக முக்கியம் அல்லவா?

**அவர் கட்டளைகளை கைக்கொள்ளுகிறவன்**: 1 யோவான் 3:24ம் வசனம் கூறுகிறது "அவருடைய கட்டளைகளைக் கைக்கொள் ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். ஆவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்". என்பதாக. தேவன் மனிதனை படைத்த போது அவனுக்கு ஒரு கட்டளையைக் கொடுத்தார். மனிதன் சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டு கட்டளையை மீறி தேவ உறவை விட்டு தன்னை மறைத்துக் கொள்ள முயற்சித்தான். தேவனோ தூரமாய் போன மனுக்குலத்தை சீர் படுத்த அனேக தேவ மனிதர்கள் மூலம் கட்டளைகளை கொடுத்தர். கிறிஸ்துவானவரின் உலக நாட்களிலும் அதை பின்பற்றியே நடந்தார் என வேதம் நமக்கு கற்பிக்கிறது.

**அன்பில் நிலைத்திலக்கிறவன்:** 1யோவான் 4:16ல் "தேவன் நம் மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசிக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்." ஏன காண்கிறோம. யோசேப்பு, நாம் நன்கு அறிந்த ஒரு பாத்திரம், பொறாமையின் காரணத்தால் தன் சகோதரர்களால் துன்பப்படுத்தி விற்கப்பட்டான். தன்னை துன்புறுத்தி அடிமையாய் விற்ற சகோதரர்கள் பஞ்ச காலத்தில் தன்னை தேடி வந்த போது எவ்வளவாய் அவர்கள் மேல் அன்பு கூர்ந்து அவர்கள் தேவைகளை சந்தித்தான் என்று வேதம் நமக்குக் கற்பிக்கிறது.

**கிறிஸ்துவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைப் பண்ணுகிறவன்:** ரோமர் 10:9 கூறுகிறது ''கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கை யிட்டுஇ தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சக்கப்படுவாய்.''என்று. இந்நாட்களில் அறிக்கை செய்வது என்பது கடமைக்காக மற்றவர்கள் முன்பாக சொல்லுவது என்று நம்மில் பலர் தவறாக அர்த்தம் கொண்டிருக்கிறோம். அறிக்கை செய்வது என்றால் நாம் நம் வாழ்வை முழுவதுமாக ஆராய்ந்து இனி வரும் காலங்களில் அவர் சித்தப்படி செய்ய நம்மை ஒப்புக்கொடுத்து சாட்சியாக வாழ்வேன் என தேவனுக்கு முன்பாக நம்மை அற்பணம் செய்வது. அப்பேர்பட்ட நம்முடைய வாழ்வு அனேகரை கிறிஸதுவுக்கு நேராக வழி நடத்தும் என்பது அதிக நிச்சயம்.

**அன்பு விசுவாசிகளே! ஒரு முறை நம்மை நாமே ஆராய்ந்து பாாப்போமா? தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் நன்மையான பாதைக்கு நேராக வழி நடத்துவாராக.**

**Mr. M. Neasmony**

FACTS

Did you KNOW?

Prep by Mr. Elango Durai

பழைய ஏற்பாடு-புதிய ஏற்பாடு
மொத்த புத்தகங்களை நினைவில் வைக்க சுலபமான முறை

3 எழுத்துக்கள் 9 எழுத்துக்கள்

1 2 3 1 2 3 4 5 6 7 8 9

OLD TESTAMENT

39 பழைய ஏற்பாடு புத்தகங்கள்

3X9= 27 புதிய ஏற்பாடு புத்தகங்கள்


Easy method to remember the Old and New Testament total books

# வெளிப்படுத்தின விசேஷம்

நீ கண்டவைகளையும்,
இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு
சம்பவிப்பவைகளையும் எழுது. 1:19

- கண்டவைகள் அதிகாரம் 1
- இருக்கிறவைகள் அதிகாரம் 2-3
- இனி சம்பவிப்பவைகள் அதிகாரங்கள் 4-22

# பாடல் பிறந்த கதை




பரலோகமே, என் சொந்தமே,
என்று காண்பேனோ?
என் இன்ப இயேசுவை
என்று காண்பேனோ?

வருத்தம் பசி தாகம்
மனத் துயரம் அங்கே இல்லை
விண் கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன்

சிலுவையில் அறையுண்டேன்
இனி நானல்ல, இயேசுவே
அவரின் மகிமையே
எனது இலட்சியமே

கல்லீரல் பாதிக்கப்பட்டதால் மிகுந்த பெலவீனமடைந்து, மரணப்படுக்கையில் கிடந்த அந்த இளம் வாலிபன், தன்னைச் சூழ்ந்து நின்ற தன் தாயார், இளம் மனைவி, மற்றும் இரு குழந்தைகளை நோக்கிப் பார்த்தான். தன்னை சிறுவயது முதல் அன்பாய்ப் பராமரித்து வளர்த்த தன் தாயாரிடம், தன் மனைவியையும், இரு குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பை, வேதனையுடன் ஒப்படைத்தான். அனைவரின் கண்களிலுமிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

இந்துப் பின்னணியிலிருந்து ஆண்டவரை ஏற்ற அத்தாயாரும், அவனது மனைவியும் பிள்ளைகளும் செய்வதறியாது திகைத்து நின்றனர். ஆதரவற்றோருக்கு ஆறுதலளிக்கும் ஆண்டவரின் வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டு, ஒவ்வொருவராகப் போராடி ஜெபித்தனர். நெரிந்த நாணலை முறியாத, மங்கியெரிகிற திரியை அணையாத தேவனின் சந்நிதியில், அவரிகளின் ஜெபம் எட்டியது.

வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் நின்ற அவ்வாலிபனின் உள்ளமோ, மரணத்தையும் தாண்டி, பரலோக வாழ்வை நாடி, வாஞ்சித்தது. அனைவரும் ஜெபித்து முடித்த பின்னர், கண்களைத் திறந்த அவ்வாலிபன், ஆவியானவர் தந்த நல்நம்பிக்கையால் நிறைந்து, **"பரலோகமே, என் சொந்தமே"** எனும் இப்பாடலின் முதல் இரு சரணங்களையும் எழுதினார். அதைத் தொடர்ந்து, **"கர்த்தாவே, என் பெலனே, உம்மில் அன்பு கூருவேன்"** என்ற நம்பிக்கை நிறைந்த மற்றொரு பாடலின் முதல் இரு சரணங்களையும் அந்நேரமே எழுதினார்.

“உன் விண்ணப்த்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன். இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்” (II இராஜாக்கள் 20:5) என்று எசேக்கியா இராஜாவுக்கு வாக்களித்து, அற்புத சுகமளித்த ஆண்டவர், இக்குடும்பத்தாரையும் தேற்றினார். அவ்வாலிபன் ஒரே வாரத்தில் சுகம் பெற்றான். மரணத்தருவாயில், இந்த அருமையான நம்பிக்கையூட்டும் ஆறுதல் பாடலை இயற்றிய அவ்வாலிபன், **போதகர் M.வின்செண்ட் சாமுவேல்** ஆவார். அவர் தனது சிறுவயது முதல் தமிழ் மொழியில் ஆர்வம் மிக்கவராக விளங்கினார். இளம் வாலிப நாட்களில், தாள வாத்திய இசைக் கலையரானார். இசையில் தாலந்து மிக்க, வாலிபர்களான சத்தி விக்டர், சுவென் பீட்டருடன் இணைந்து, ஒரே குழுவாக, கிறிஸ்தவ இன்னிசைக் கச்சேரிகளை, திருச்சபை நிகழ்ச்சிகளிலும், மற்றும் திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள், கிறிஸ்மஸ் பாடல் ஆராதனைகளிலும் நடத்தினார்.

வின்செண்ட் சாமுவேல் மருத்துவப்படிப்பை மேற்கொள்ள விரும்பினார். ஆனால், அவரது பெற்றோரோ தேவ சித்தத்தின்படி, அவரை சென்னை பெந்தெகொஸ்தே சபை (MPA) நடத்திய வேதாகமக் கல்லு}ரிக்கு அனுப்பி வைத்தனர். வின்செண்ட் 1972ல் தனது இறையியல் படிப்பை முடித்து, அக்கல்லு}ரியிலேயே விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1973ம் ஆண்டு சாந்தகுமாரி என்ற பெண்மணியைத் திருமணம் செய்தார். இத்தம்பதியருக்கு, பிரேம்நாத் என்ற மகனும், ரூத் பிரியா சலோமி என்ற மகளும் பிறந்தனர்.

அந்நாட்களில் வின்செண்ட் சாமுவேல் MPA திருச்சபையின் பத்திரிகையான “சத்திய சமய சஞ்சீவி” யில், பல கவிதைகள் , கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். இவர் இயற்றிய முதல் பாடல், “ஒப்புவிக்கிறேன் ஐயனே” என்பதாகும். MPA திருச்சபையின் தலைமைப் போதகரான காலம் சென்ற பிரபுதாஸ் வாசு, அத்திருச்சபையின் வருடாந்திர கன்வென்ஷன் கூட்டங்களுக்குப் பாடல்கள் எழுதுமாறு, வின்செண்ட் சாமுவேலை உற்சாகப்படுத்தினார்.

எனவே, ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கென, அந்தந்த ஆண்டின் கருப்பொருளைச் சார்ந்து, போதகர் வாசு தெரிந்தெடுக்கும் வேத வசனங்களை மனதில் கொண்டு, பல பாடல்களை இயற்றுவது வின்செண்ட் சாமுவேலின் வழக்கமாயிற்று. சகோ. சத்தி விக்டர் இப்பாடல்களுக்கு ராகம் அமைத்துக் கொடுப்பார். சில வேளைகளில், சத்தி விக்டர் முதலில் இராகம் அமைக்க, அதற்கேற்றபடி, பாடல்களை போதகர் வின்செண்ட் சாமுவேல் எழுதுவதுமுண்டு. ஒவ்வொரு பாடலையும் இம்மூவரும் சேர்ந்து ஆராய்ந்து பார்த்து, அதை இன்னும் மெருகேற்றுவதற்கான மாறுதல்களைச் செய்வார்கள்.

சுகமடைந்த வின்செண்ட் சாமுவேல், தனது பெலவீன நிலையில் எழுதிய இப்பாடலைப் போதகர் வாசுவிடம் காண்பித்தார். 1980ம் ஆண்டின் MPA கன்வென்ஷன் கூட்டத்திற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்ததால், அக்கூட்டத்தின் கருப்பொருளுக்குப் பொருந்தும் வகையில், இன்னும் பல சரணங்களை இயற்றிச் சேர்க்குமாறு போதகர் வாசு, வின்செண்ட் சாமுவேலைக் கேட்டுக் கொண்டார். வாசு கொடுத்த வேத வசனங்களின் அடிப்படையில், மீதமுள்ள சரணங்களையும் வின்செண்ட் சாமுவேல் எழுதி முடித்தார்.

இப்பாடலுக்கான இராகத்தை, சகோ. சத்தி விக்டர் அமைத்தார். அதைக்கேட்ட அவரது இசைக்குழு


நண்பரான சுவென் பீட்டர், சரணங்களுக்கு இன்னும் பொருத்தமான இராகத்தை அமைத்தார். இம்மாற்ங்களுடன் இப்பாடல் இன்னும் சிறப்பாக அமைந்தது. பின்னர், 1980ம் ஆண்டின் MPA கன்வென்ஷன் கூட்டங்களில் இப்பாடல் அறிமுகம் செய்யப்பட்டது. அன்று முதல் இப்பாடல் பலதரப்பட்ட மக்களுக்கு மரணத்தின் மீது வெற்றி சிறக்கும் ஒரு நல் நம்பிக்கையைத் தந்து, பரலோக வாழ்வின் மகிமையை எதிர்நோக்கியவர்களாய், சமாதானத்துடன் இவ்வுலகை விட்டுச் செல்ல உதவியுள்ளது.

போதகர் D. ஜான் ரவீந்திரநாத், HMV நிறுவனத்தின் மூலம் வெளியிட்ட "இயேசு வருகிறார்" என்ற தனது இசைத்தட்டில் இப்பாடலைச் சேர்த்தார். அதில், பேர் பெற்ற கிறிஸ்தவ இன்னிசைப் பாடகி, திருமதி சுசிலா அருமைநாயகம் இப்பாடலைப் பாடினார்.

**"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோசெயர் 3:2) என்ற வேத வசனத்தின் எச்சரிப்பு இப்பாடலில் தெளிவாத் தொனிக்கிறதல்லவா!**





கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக…!!! உலகம் சந்தித்துக் கொண்டிருக்கிற இந்த இக்கட்டான ஒரு சூழ்நிலையில்; நம்முடைய திருச்சபையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரையும், நம்முடைய குடும்பத்தையும் நண்பர்களையும், உற்றார் உறவினர்களையும் கர்த்தர் இம்மட்டும் கண்ணின் மணியை போல பாதுகாத்து பலப்படுத்தி தாங்கி வருகிறதை நினைத்து கர்த்தரை நாங்கள் அதிகமாய் துதிக்கிறோம்; கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறோம்.




இம்மட்டும் வழிநடத்தி வந்த எபினேசர்; இனிமேலும் நம்மை பாதுகாப்பார், வழி நடத்துவார். கர்த்தருடைய கிருபை நம் ஒவ்வொருவரோடும் எப்போதும் தங்கியிருக்க நாம் இன்னும் ஊக்கமாய் ஜெபிப்போம்.


# சிறுவர் பகுதி / Children's Corner




And he said unto them, Ye are from beneath; I am from above: ye are of this world; I am not of this world. I said therefore unto you, that ye shall die in your sins: for if ye believe not that I am he, ye shall die in your sins. – JOHN 8:23-24 KJV



# Coloring Page-1 (Kin/Beg)




| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# Sodom and Gomorrah Spot the Differences

Compare the picture on the top with the picture on bottom. Circle the 19 things that are different.





| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**Beg / Primary**

# The Twelve Sons of Jacob


| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| c | j | u | d | a | h | i | l | a | t | h | p | a | n | n |
| b | i | q | k | n | u | l | u | b | e | z | g | l | j | h |
| b | z | g | n | i | m | a | j | n | e | b | f | e | p | u |
| d | a | n | b | o | w | s | i | v | g | p | e | e | d | d |
| s | n | n | e | b | u | e | r | g | o | i | s | j | i | z |
| t | q | c | a | l | e | v | i | d | s | o | m | t | q | y |
| e | k | t | p | r | z | m | g | s | j | w | q | e | r | q |
| j | z | m | v | g | b | a | a | h | n | g | r | h | a | e |
| u | g | p | o | v | d | c | z | m | k | e | d | v | u | r |
| w | d | l | z | m | h | j | s | z | h | s | v | z | q | l |
| g | i | i | t | a | n | k | y | s | o | i | h | t | g | y |
| l | n | g | r | d | k | m | a | g | r | m | m | h | z | w |
| z | y | t | h | d | o | y | u | l | k | e | f | p | h | g |
| z | t | s | r | z | q | n | b | m | z | o | q | m | c | z |
| r | y | e | l | t | z | s | b | m | k | n | w | o | l | i |

Reuben
Simeon
Levi
Judah
Issachar
Zebulun

Dan
Joseph
Benjamin
Naphtali
Gad
Asher

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

# Paul and Silas in Prison Crossword Puzzle




## ACROSS

5. Paul and Silas were traveling and __________ God's Word.
6. He traveled with Paul.
7. Paul and Silas __________ during the night.

## DOWN

1. Officer who watches prisoners
2. During the night, they sang these.
3. The ground shakes during this.
4. While they were being held, Paul and Silas wore these.
7. Paul and Silas were put in __________.

**Primary & Above**

1. In 2 Corinthians, Paul extends a greeting not only from himself but from one other Christian brother. Can you name him?
   a) Sosthenes b) Titus c) Timothy d) Silvanus

2. Paul was comforted when he learned that his first letter to the Corinthian church was well received. Who brought Paul this welcome news?
   a) Titus b) Timothy c) Silvanus d) Luke

3. How many times did Paul receive 39 lashes from the Jews?

4. How many times was Paul beaten with rods?

5. The sorrow of the world produces death. What does godly sorrow produce?

6. Paul received an abundance of revelations from God. That he might not boast unduly, what else did he receive?

7. In chapter 8, what rule does Paul give in regard to giving?

8. This letter to the Corinthians contains one of the New Testament's clearest statements regarding what happens at death for a Christian. Where is this passage and what is the key statement?

9. Throughout this epistle Paul defends his conduct, character, and calling against the charges false teachers were making. Can you give at least two charges these enemies used to discredit him?

Your Name Here...

## Kids who did the Coloring

Crasslin Devona / Reagan Shan /Hartlyn Herchil
Jania Preni / Johan Sanjo / Rishon Yojit /
Ridhun Yojit / Chris Gabriel / Eion Jayden
Jeremiah / Jemima

## Kids who did the Spot Difference

Eric Aaron / Reagan Shan / Johan Sanjo
Jason Eric / Ridhun Yojit / Eric Jayden
Jeremiah / Jemima

## Kids who did the Word Search

Roshan / Eric Aaron / Johan Sanjo
Jason Eric / Eric Jayden
Jonathan / Jeremiah

## Children who successfully did Bible Cross Word

Roshan / Eric Aaron / Shelbino
Jason Eric / Eric Jayden / Joshua
Angelin / Annlin / Jonathan

## Children who successfully did the Bible Quiz

Roshan / Shelbino / Eric Aaron / Jason Eric
/ Dennis / Annlin / Angelin / Joshua
Jonathan

# வேத வினா-விடை போட்டி
## (நாகூம், ஆபகூக், செப்பனியா)

1. கர்த்தருடைய பராக்கிரமம் எங்கே மறைந்திருக்கிறது?
2. கர்த்தருடைய கோபத்தின் நாளிலே நாம் மறைக்கப்படுவதற்கு எவைகளை தேட வேண்டும்?
3. பூமி எதினால் நிறைந்திருக்கிறது?
4. நினிவேக்கு பெலனாக இருந்தது யார்?
5. யாரை கர்த்தர் இவ்விடத்தில் இராதபடிக்கு சங்காரம் பண்ணுவார்?
6. யாருடைய இரதங்களை கர்த்தர் எரித்துப்போடுவேன் என்று சொல்கிறார்?
7. செப்பனியா தீர்க்கதரிசனம் உரைத்தக் காலத்தில் யூதா தேசத்தில் ராஜாவாக இருந்தது யார்?
8. கொள்ளையும், கொடுமையும் எனக்கு எதிரே நிற்கிறது என்று சொன்னது யார்?
9. கர்த்தருடைய பாதத்தூள்கள் எது?
10. கர்த்தர் எங்கே இருக்கிறார்?

**சென்ற மாத விடைகள்**

| | |
|---|---|
| 1.மீகா 5:2 | 2.மீகா 7:8 |
| 3.மீகா 1:1 | 4.யோனா 3:3 |
| 5.யோனா 1:5 | 6.மீகா 6:8 |
| 7.மீகா 4:2 | 8.ஒபதியா 1:18 |
| 9.மீகா 7:19 | 10.யோனா 3:5 |

**நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்**




**April'2020**
**விடை எழுதியவர்கள்**

- திரு . ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்
- திரு. M.C கிறிஸ்டோபர்
- திருமதி. ஜமுனா ராணி
- திருமதி. ராதிகா செல்வகுமார்
- திருமதி. ஜெயந்தா ஜாண்
- திருமதி. ஜெயின் ராஜவேல்
- திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
- திருமதி. பிப்லின் நெல்சன்
- திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
- திருமதி. ரோஸ்லின் பாலாஜி
- திருமதி. ஷாலினி கிங்சிலி
- திருமதி. பெட்ரிஷீயா ஜேசன்
- திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்
- திருமதி. பமீலா டேனியல்
- திருமதி. ஷெரின் டியென்ஷன்
- செல்வி. ஜெரின் மகதலேன்
- திருமதி. எபென் A. பிரசாத்
- திருமதி. சிந்துஜா சதீஷ்

# பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர்

## பிறந்தநாள் ஆசரிப்போர் Birthday Celebrants

| | | | |
|---|---|---|---|
| 01 May | Ms. Alen Maisie | 16 May | Mr. Baskar Johnson |
| 02 May | Mr. Gain | 16 May | Mrs. Nirmala Jenifer Paul |
| 03 May | Mr. Ashok Kumar | 18 May | Mr. R Aruldhas |
| 05 May | Mrs. Lavanya Kannan | 19 May | Mrs. Salini Vimala Kingsly |
| 08 May | Baby. Jesil Bernice | 19 May | Mr. Robert Wilson. T |
| 09 May | Mr. Anbu Das | 19 May | Mr. Vijin Raj. P |
| 10 May | Mrs. Beula Rani Livingston | 20 May | Mr. Pushparaj.B |
| 11 May | Mr. Rajesh ChellaDurai | 23 May | Mr. C. Havin Heba |
| 13 May | Mr. Selvistor Solomon | 25 May | Dr. Shino P Mathew |
| 14 May | Mr. Kumar | 25 May | Mr. Mahendran. R |
| 15 May | Mr. George Rose | 26 May | Ms J. H. Juana |
| 16 May | Mr. A Selvakumar | 29 May | Mr. John Solomon |

## திருமணநாள் ஆசரிப்போர் / Wedding Anniversary

| | | | |
|---|---|---|---|
| 04-May | Mr. Lawrance Gambeeram<br>Mrs. Augusta Lawrance | 25-May | Mr. Antony Jesu Rajan<br>Mrs. Jamuna Rani |
| 06-May | Mr. R Aruldhas<br>Mrs. Prassana | 25-May | Mr. David Sornabalan<br>Mr. Yesubai |
| 07-May | Dr. Shino P Mathew<br>Dr. Shelly Kurian | 25-May | Mr. Vijin Raj<br>Mrs. Pamela Jeniffer |
| 12-May | Mr. Selva Kumar &<br>Mrs. Radhiha Grace | 26-May | Mr. Y.Mesiah Das<br>Mrs. Suja Jasmine |
| 13-May | Mr. John Joseph<br>Mrs. Jessy Beula | 26-May | Mr. Rajesh ChellaDurai<br>Mrs. Shalini |

Celebrate the Gift of the Life
Given by God &
Enjoy this Special day...!!!

என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.
நீதிமொழிகள் 9:11

# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

| CSI Tamil Parish Family No: 105 | Mobile No: 055 468 2281 |
|---|---|
| Mr. Praveen Paul (Head) |  |
| Mrs. Sugitha Isravel (Wife) | |
| Baby. Abigail Christine (Daughter)<br>Baby. Elianna Kacy (Daughter) | |
| Location in India:<br>Nesavalar colony, Nagercoil-3,<br>Kanyakumari dt. Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 106 | Mobile No: 050 957 8728 |
|---|---|
| Mr. Chandrasekar (Head) |  |
| Mrs. Harika Chandrasekar (Wife) | |
| Baby. Navina Chandrasekar (Daughter) | |
| Location in India:<br>Melandai Street,<br>Arukantham Poondi, Vellore<br>Tamilnadu | |

| CSI Tamil Parish Family No: 107 | Mobile No: 055 137 2994 |
|---|---|
| Mr. Prem Jenifer (Head) |  |
| Mrs. Baby Christy Monalizha (Wife) | |
| Mstr. Aaren Cristo (Son) | |
| Location in India:<br>South Main road, Dohnavur,<br>Thirunelveli, Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 108 | Mobile No: 052 565 7790 |
|---|---|
| Mr. Prince Immanuel (Head) |  |
| Mrs. Josephine Nimshi (Wife) | |
| Baby. Isabella Jane (Daughter) | |
| Location in India:<br>Mundagan Street<br>Near Sakkammal Kovil, Sivakasi(PO)<br>(Viruthu nagar Dist, Tamilnadu | |



# கொரோனா...

கொரோனா'வினால் பாதிக்கப்பட்டோர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் குணமாக ஜெபிப்போம்.

இந்த கொடூர நேரத்தில் பணிபுரியும் மருத்துவ குழுவினரின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் சுகத்திற்காகவும்,

ஊரடங்கு உத்தரவின் காரணமாக தினக்கூலிகள், ரோட்டோரத்தில் வாழும் ஆதரவற்ற மக்களின் வாழ்வாதாரம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலை மாற ஜெபிப்போம்

கொரோனோ பாதிப்பு குறைந்து, மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கைக்கு சீக்கிரம் திரும்ப தேவனிடம் மன்றாடுவோம்

ஒருவேளை உணவு கூட இல்லாமல் பசி, பட்டினியால் பாதிக்கப்படுவோர் நம் தேசத்தில் அநேகம். இதற்காக அரசு தீவிர நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

---



| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம்,<br>கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர்<br>குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/– Month | AED 450/– Month |
| **இணைந்து மிஷனரி ஊழியத்தை கட்டுவோம் வாருங்கள்.**<br>ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க உங்களை அன்போடு அழைக்கிறோம். | | |

# DAILY BIBLE READING 2020

**"Your word is a lamp to my feet and light for my Path"**

This reading plan will guide you through all 66 books of the Bible in the coming year.

**Don't Say "God is Silent" When your Bible is Closed…**

## MAY

1 1 Chronicles 7 – 9
2 1 Chronicles 10 – 12
3 1 Chronicles 13 – 16
4 1 Chronicles 17 – 19
5 1 Chronicles 20 – 23
6 1 Chronicles 24 – 26
7 1 Chronicles 27 – 29
8 2 Chronicles 1 – 4
9 2 Chronicles 5 – 7
10 2 Chronicles 8 – 11
11 2 Chronicles 12 – 16
12 2 Chronicles 17 – 20
13 2 Chronicles 21 – 24
14 2 Chronicles 25 – 28
15 2 Chronicles 29 – 31
16 2 Chronicles 32 – 34
17 2 Chronicles 35 – 36
18 Ezra 1 – 4
19 Ezra 5 – 7
20 Ezra 8 – 10
21 Nehemiah 1 – 3
22 Nehemiah 4 – 7
23 Nehemiah 8 – 10
24 Nehemiah 11 – 13
25 Esther 1 – 5
26 Esther 6 – 10
27 Job 1 – 4
28 Job 5 – 8
29 Job 9 – 12
30 Job 13 – 16
31 Job 17 – 20

# C.S.I TAMIL PARISH, ALAIN- UAE

**CHURCH ONLINE**



YouTube

Website


EDITOR

REV. M. CHRISTOPHER RAJENDRAN BSC., BD., MSC. (PSY)

THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES

POST BOX. 67747 | TEL: +971 (3) 765 9630 | MOB: 0567105082

Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org


STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY